**Page No.**
**O.S.73/2022**

Date : 10.07.2026

பி.சா.1 : சௌந்தரசெல்வி

பி.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு வாதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர் பாகபாத்திய விடுதலை பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து அப்பாவின் கிரைய சொத்து என்றால் சரிதான். அப்பா வழக்கு சொத்தை 1972 ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஒரு வீடு என்றால் சரிதான். அப்பா 1988 ம் வருடம் காலம் சென்று விட்டார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு நான், என் சகோதரர் மற்றும் என் அம்மா ஆகிய மூவர் வாரிசுகள் என்றால் சரிதான். என் அம்மா 2021 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நானும் வழக்கின் வாதியும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். அப்பா பெயரில்தான் வீட்டுதீர்வை இரசீது உள்ளது என்றால் சரிதான். அப்பா பெயர் சங்கரன். என் அம்மா வழக்கு சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். 2021 ம் ஆண்டு என் அம்மா என் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுது கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது பி.சா-ஆ.1 ஆகும். அந்த UDR திட்ட பட்டாவின் அடிப்படையில் எனக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதிக்கு UDR திட்ட பட்டாவின் படி வாதிக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதால் பட்டா செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு இன்றுவரை என் அப்பாவின் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் என் தம்பிதான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அம்மா பெயர் பாப்பாத்தி அம்மாள் என்றால் சரிதான். அம்மா எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. சொத்தில் எனக்கும் என் தம்பிக்கும் 1/2 பாகம் உரிமை உண்டு என்றால் சரிதான்.